**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. S. அபூர்வா, B.A., L.L.B.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 17–ஆம் தேதி, வியாழக்கிழமை**

**இ.ம.எண்.10/2024**

in

**அ.வ.எண்.14/2019**

1. மகேஸ்வரி

2.M.விக்னேஷ்

3.M.ரோகினி --- மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

ஈஸ்வரன் ---- 1 ம்எதிர்மனுதாரர்/வாதி

காளியம்மாள்(இறப்பு) ---- 2 ம் எதிர்மனுதாரர்/5 ம் பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 03.04.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.பாஸ்கரன்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.இராஜமாணிக்கம்,B.A.,L.L.B.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

வழக்கு சொத்தான கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டக் கட்டளை **26 விதி**

**9–ன்** கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :**

2.1. தாவா வழக்கு சொத்து மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதால் மலையில் உள்ள பன்றிகள் மற்றும் யானைகள் அடிக்கடி இரை மற்றும் தண்ணீர் தேடி மனு சொத்து உள்ள பகுதியில் வந்து செல்வதால் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சுற்றிலும், மனுச்சொத்தில் விலங்குகள் மற்றும் பாதுகாப்பு கருதி சோலார் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும், தாவா கிணற்றுக்கு மேற்கே 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் நிலம் அமைந்துள்ளது என்றும், இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் அசல்வழக்கில் ஏற்கனவே 1ம் மனுதாரர் கணவர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இ.ம.எண்.3/2019–ல் மனு தாக்கல் செய்ததாகவும், மனுச்சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

2.2. தாவா கிணற்றுக்கு 1ம் எதிர்மனுதாரர்/வாதி மேற்கே இருந்து கிழக்கே கிணற்றுக்கு வந்துசெல்லும் வகையில் மேற்படி கிணற்றுக்கு மேற்குப்பக்கம் உள்ள சோலார் வேலியை சுமார் 6 அடிக்கு மேலே எழுப்பியுள்ளதை மட்டும் அகற்ற வேண்டியிருந்ததில் மேற்படி வேலி மனுதாரரர் கணவரால் முழுவதுமாக அகற்றப்பட்டுவிட்டது என்றும், ஆனால் 1ம் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி விவரத்தை மறைத்து மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே மேற்படி கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

3.1. எதிர்மனுதாரர் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி கடந்த 2019 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தா என்றும், இவ்வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்தினை அளந்து வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி கடந்த 14.10.2019 ஆம் தேதியன்று மனு தாக்கல் செய்தனர் என்றும், அதன் பேரில் 19.11.2019 ம் தேதியன்று நீதிமன்ற ஆணையரை நியமித்து கடந்த 26.02.2020 ல் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனைத் தொடந்து அதற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் இடைக்கால செயலுத்துக்கட்டளை பரிகாரம் கோரி I.A.No.56/2019 ன் கீழ் தாக்கல் செய்த மனுவும் கடந்த 18.12.2020 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டதாவும், தாவா கிணற்றை சுற்றியுள்ள கம்பி வேலியை அகற்ற உத்தரவிட்டனர் என்றும், ஆனால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முழுவதுமாக தற்போதுவரை அகற்றாமலும் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் இருந்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3. அதனைத் தொடர்ந்து, மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியங்கள் முடிந்தது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மூன்று சாட்சிகள் வழங்கி விசாரணை காலம் முடிந்து வழக்கு தற்போது எதிர்மனுதாரர் தரப்பு விவாத உரைக்காக கடந்த 22.11.2024 ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் விவாதஉரை பேச தயாராக இருக்கும்போது மனுதாரர்கள் மீண்டும் தாவா கிணற்றை நீதிமன்ற ஆணையர் பார்வையிட வேண்டி இம்மனு மூலம் தாக்கல் செய்ததற்கு சரியான காரணங்களோ, விளக்கமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் உபயமனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளுக்கு ஆணையர் அறிக்கை முக்கியமல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

3.4. மேலும், மேற்படி மனுவில் தாவா கிணற்றில் மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளது என்றும், அதனை பார்வையிட வேண்டும் என கோருகின்றனர் என்றும், ஆனால் எதிர்மனுதாரருக்கு தாவா கிணற்றில் 5 ல் 1 பங்கு பாகம் உள்ளது என்றும், தாவா கிணற்றை சுற்றி போய்வர எனக்கு உரிமை உள்ளது என்றும், ஒரு பகுதி மட்டும் வேலி அகற்றப்பட்டுள்ளது என கூறுவதும் அதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோருவதும் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மேலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில் "தாவாச்சொத்தில் அமைக்கப்பட்ட மேற்படி வேலியை முழுமையாக அகற்றவில்லை என்றால் சரிதான்." என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் பி.வா.சா.2, பி.வா.சா.3 சாட்சிகளும் விசாரணையில் தாவாச் சொத்தில் உள்ள வேலி முழுமையாக அகற்றப்படவில்லை என சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீண்டும் தாவா கிணற்றை பார்வையிட கோரும் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது

**4.** இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு** :

6.1. மனுதாரர் தரப்பில் தாவா கிணற்றுக்கு 1ஆம் எதிர்மனுதாரர்/வாதி மேற்கே இருந்து கிழக்கே கிணற்றுக்கு வந்துசெல்லும் வகையில் மேற்படி கிணற்றுக்கு மேற்குபக்கம் உள்ள சோலார் வேலியை சுமார் 6 அடிக்கு மேலே எழுப்பியுள்ளதை மட்டும் அகற்ற வேண்டியிருந்ததில் மேற்படி வேலி 1 ஆம்

மனுதாரரின் கணவரால் முழுவதுமாக அகற்றப்பட்டுவிட்டது என்றும், ஆனால் 1 ஆம் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி விவரத்தை மறைத்து மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே மேற்படி கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு தாவா கிணற்றில் 5 ல் 1 பங்கு பாகம் உள்ளது என்றும், தாவா கிணற்றை சுற்றி போய்வர எனக்கு உரிமை உள்ளது என்றும், ஒரு பகுதி மட்டும் வேலி அகற்றப்பட்டுள்ளது என கூறுவதும் அதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோருவதும் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீண்டும் தாவா கிணற்றை பார்வையிட கோரும் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6.3. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அசல் வழக்கில் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா கிணற்றுக்கு 1 ஆம் எதிர்மனுதாரர்/வாதி மேற்கே இருந்து கிழக்கே கிணற்றுக்கு வந்துசெல்லும் வகையில் மேற்படி கிணற்றுக்கு மேற்குபக்கம் உள்ள சோலார் வேலியை சுமார் 6 அடிக்கு மேலே எழுப்பியுள்ளதை மட்டும் அகற்ற வேண்டியிருந்ததில் மேற்படி வேலி 1 ஆம் மனுதாரரின் கணவரால் முழுவதுமாக அகற்றப்பட்டுவிட்டது என்றும், எனவே மேற்படி கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்த போது மனுதாரரால் வழக்குச் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட ஆணையர் நியமனம் கோரி I.A.3/2019-ன் கீழ்

மனு தாக்கல் செய்யப்பட்டு, மாண்பமை நீதிமன்றத்தால் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு கடந்த 26.02.2020 ஆம் தேதி அன்று ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. மேலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் I.A.56/2019 -ன் கீழ் இடைக்கால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த 18.12.2020 ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு தாவா கிணற்றை சுற்றி மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ள சோலார் மின்வேலியை அகற்ற வேண்டும் என மனுதாரருக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்து மாண்புமிகு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

6.4. அசல் வழக்கானது 2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரரால் மனுச்சொத்தைப் பொறுத்து மனுச் சொத்தினை அளந்து வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி கடந்த 14.10.2019 ஆம் தேதியன்று மனு தாக்கல் செய்தனர். அதன் பேரில் 19.11.2019 ம் தேதியன்று நீதிமன்ற ஆணையரை நியமித்து கடந்த 26.02.2020 ல் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் மனுச்சொத்தைப் பொறுத்து தாவா கிணற்றுக்கு 1 ஆம் எதிர்மனுதாரர்/வாதி மேற்கே இருந்து கிழக்கே கிணற்றுக்கு வந்துசெல்லும் வகையில் மேற்படி கிணற்றுக்கு மேற்குபக்கம் உள்ள சோலார் வேலியை சுமார் 6 அடிக்கு மேலே எழுப்பியுள்ளதை மட்டும் அகற்ற வேண்டியிருந்ததில் மேற்படி வேலி 1 ஆம் மனுதாரரின் கணவரால் முழுவதுமாக அகற்றப்பட்டுவிட்டது என்று மேற்படி கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் அசல் வழக்கில் பி.வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்ட 1 ஆம் எதிர்மனுதாரர் தனது சாட்சியத்தில் "இந்நீதிமன்றத்தில் வழக்கு முடிவுறும் வரை தாவா சொத்தில் அமைக்கப்பட்ட

வேலியை அகற்றி வைக்க வேண்டுமென இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியும் என்றால் தெரியும் அதன் பிறகு தாவா சொத்தில் அமைக்கப்பட்ட மேற்படி வேலியை முழுமையாக அகற்றவில்லை என்றால் சரிதான். ஆனால் மேல்புறத்தில் உள்ள வேலியை முழுமையாக அகற்றிவிட்டோம்" என்று சாட்சியம் அளித்துள்ளார். பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் மேற்படி சங்கதிகளை பொறுத்து ஒத்துப்போகின்றனர். மேலும் 1ஆம் மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளுக்கு ஆணையர் நியமனம் செய்வது தேவையில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், மேலும் I.A.No.56/2019 ன் கீழான மனுவில் தாவா கிணற்றை சுற்றியுள்ள கம்பி வேலியை அகற்ற மாண்பமை நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முழுவதுமாக தற்போதுவரை அகற்றாமலும் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் இருந்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **K.S.Palanisamy Vs. Ramasamy** என்ற வழக்கில், " It is well settled dictum of the Apex Court that no Commissioner was appointed for collecting evidence. It is the duty of the respondent/plaintiff to prove his case by letting oral and documentary evidence" என்று கூறியுள்ளது. மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **Saravanakumar Vs. Ponnusamy** and others என்ற வழக்கில், "Admitted fact need not to be proved and for that purpose the advocate commissioner need not to be appointed for collecting evidence " என்று கூறியுள்ளது.

6.5. மேலும் வழக்கை நிரூபிக்கும் பொறுப்பு எதிர்மனுதாரர்/வாதியிடமே உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கில் கடந்த 12.06.2024 ஆம் தேதி எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் சாட்சியங்கள் முழுமையாக முடிக்கப்பட்டது என்பதையும் கடந்த 15.11.2024 ஆம் தேதி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது என்பதையும்

கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இந்த மனுவை தள்ளுபடி செய்தும், மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு செலவு தொகையை தரப்பினர்களே ஏற்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 17–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள். இல்லை.**

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.